## JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU
## CC No.213/2023

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw11/ Pw6 |
| Name | : Dhayalan |
| Father/Husband's Name | : Meiyappan |
| Village | : |
| Taluk | : Chennai |
| Calling | : |
| Age | : 62 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11.03.2026.

**Accused absent.**

**முதல் விசாரணை:**

நான் கடந்த 30.06.2024 ம் தேதி ஓட்டேரி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றேன். கடந்த 23.10.2020 தேதியன்று காலை 9.30 மணியளவில் நான் நிலைய ஆஜரில் இருந்தபோது, ஷாம்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் பெற்று நிலைய குற்ற எண்.4245/2020 இதச பிரிவுகள் 279,337 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். அந்த முதல் தகவல் அறிக்கை **அதசா.ஆ4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் வழக்கின் சம்பவ இடம் சென்று, சாட்சிகள் ஜெபதாஸ் மற்றும் தேவதாஸ் ஆகியோரை முன்னிலையில் சம்பவம் இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அவைகள் முறையே **அதசா.ஆ5 மற்றும் அதசா.ஆ6 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் 1 முதல் 6 வரை உள்ளோரை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

மேற்படி சாட்சிகளின் வாக்குமூலங்களின் முலம் சம்பவம் நடைபெற்றது உண்மை என்று தெரிய வந்ததின் பேரில், எதிரியை கைது செய்ய புலன் வைத்ததில் எதிரி 24.10.2020 ம் தேதி காலை 11.00 மணிக்கு நிலையம் ஆஜரான எதிரியை உரிய காரணம் கூறி, கைது செய்து, இருநபர் பிணையில் விடுவித்தேன்.

பின்னர், இவ்வழக்கில் விபத்தை ஏற்படுத்திய வாகனம் மற்றும் விபத்திற்குண்டான வாகனம் ஆகியவற்றை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் சீனிவாசன் என்பவரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றேன். அவர் அளித்த அந்த மோட்டர் வாகன ஆய்வறிக்கைகள் முறையே **அதசா.ஆ7 மற்றும் அதசா.ஆ8 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

பின்னர் இவ்வழக்கில் 29.10.2020 ம் தேதி அன்று காயப்பட்ட நபர் சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்தவிட்ட தகவலின் பேரில், சட்ட பிரிவுகள் 279,337 இதச பிரிவிலிருந்து சட்ட பிரிவுகள் 279,304(A) வாக பிரிவு மாற்றம் செய்து, பிரிவு மாற்ற அறிக்கை தாக்கல் செய்தேன். அந்த பிரிவு மாற்ற அறிக்கை **அதசா.ஆ9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் வழக்கு கோப்புகளை பிரிவு மாற்ற செய்து, ஆய்வாளர் வசம் ஒப்படைக்க அவர் ஆவணங்களை பெற்று என்னை விசாரணை செய்தார். மேற்படி இவ்வழக்கின் ஆய்வாளர்கள் திரு.பாலாஜி மற்றும் குமார் ஆகியோர்களுடன் பணி செய்த வகையில் அவர்களின் கையெழுத்து மற்றும் விசாரணை அணுகுமுறை நன்கு தெரியும் என்பதாலும், மேலும் ஆவணங்களின் அடிப்படையிலும் நான் அவர்களுக்காகவும், மற்றும் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி என்றமுறையிலும் சாட்சியம் அளிக்கிறேன்.

பின்னர், இவ்வழக்கில் இறந்துபோன நபரின் பிரேதம் சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்ததை சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அதசா.ஆ10 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

பின்பு, இவ்வழக்கில் இறந்து போன நபரின் இறப்பிற்கான உண்மையான காரணம் அறியும் பொருட்டு காவலர் உதய்குமார் என்பவர் மூலம் பிரேதத்தை உடற்கூராய்வு செய்ய வேண்டுக்கொள் கடிதம் கொடுத்து அனுப்பியுள்ளார்.

இவ்வழக்கில் விபத்தில் காயப்பட்ட நபருக்கு முதலுதவி சிகிச்சை அளித்த குரோம்பேட்டை அரசு மருத்துவர் வித்யா என்பவரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்தார். அவர் அளித்த விபத்து பதிவேடு **அதசா.ஆ11 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் இவ்வழக்கில் இறந்து போன நபரின் உடலை உடற்கூராய்வு செய்த சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவர் நிர்மலா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, அவர் அளித்த உடற்கூராய்வு அறிக்கை **அதசா.ஆ12 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

பின்னர் இவ்வழக்கில் எனது புலன் விசாரணையை முடித்து எதிரியின் மீது மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**குறுக்கு விசாரணை:**

சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், புகார்தாரரிடமிருந்து புகார் பெறவில்லை என்றாலும், அதன் பேரில், சம்பவ இடம் செல்லாமல், காவல்நிலையத்தில் வைத்து, பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன் என்றாலும், சரியல்ல. சரிவர சாட்சிகளை விசாரிக்காமல் எதிரி மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu.